**தலைப்பு 228 - நீதிமன்ற நிருவாகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 228 - நீதிமன்ற நிருவாக திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிருவாக திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் நீதிமன்ற நிருவாக திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்ககூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் "பீ" கணக்குகள் இணக்க கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் பிரகாரம் தனித்தனி கடன் மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்குமிடையே ரூபா 13,031,920 வித்தியாசம் காணப்பட்டது. | 08 நீதிமன்ற வலயங்களின் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் கட்டுப்பாட்டு கணக்கிற்குமிடையே காணப்படுகின்ற வித்தியாசம் இதற்கு காரணமாக உள்ளதுடன் இதற்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதன் செயல்முன்னேற்றத்தினை அமைச்சிற்கு அறிக்கையிடுமாறும் MOJ/AC/13/31/2024 ஆம் இலக்க 2024-03-22 ஆந் திகதிய கடித்தின் மூலம் உரிய நீதிமன்றங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதிகளை ஒப்பீடு செய்து வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பாரத்து சரிசெய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,736,759 நிதி ஏற்பாடும் 03 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 26,505,070 நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச்சேமிப்பு 17 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | அரசாங்க செலவுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையினைப் பின்பற்றுதல், நட்டங்கள் மற்றும் சேதங்களைப் பதிவழிப்பதற்கு முன்வராமை, நிர்மாண நடவடிக்கைகள் எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாமை, ஆகிய காரணங்களின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | முறையான ஆய்வுகளுடன் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையின் மூலதனச் செலவுகளுக்காக 2201 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அந்த நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,923,954 மூலதனச் செலவுகள் திணைக்களத்தின் 228-1-1-2001 ஆம் இலக்க கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இக்கட்டிடத்தினை திருத்தம் செய்யாமையால் ஏற்படக்கூடிய உயிர் ஆபத்துக்கள் மற்றும் ஆதன ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்காக மிகவும் துரிதமாக இக்கட்டிடத்தினை திருத்தம் செய்தல் அத்தியவசியமான ஒரு விடயம் என்பதனாலும் அதன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இக்கொடுப்பனவு அமைச்சின் செலவு விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | முறையான ஆய்வுகளுடன் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 03 செலவு விடயங்களுக்குரிய ரூபா 124,590 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிட்ட இப்பெறுமதி பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான தகறுகள் இடம்பெறாத வகையில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூறறில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மைகள்** | | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | |
| நி.பி 104 | - | 2023 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் யூன் மாதங்களின் போது விபத்துக்குள்ளாகிய 02 வாகனங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் இறுதிவரை இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருக்க வில்லை. | இந்த விபத்துக்குள்ளாகிய 02 வாகனங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டில் பரீட்சிப்புச் சபை அறிக்கை முடிவடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நி.பி 109(1) மற்றும் (2) | 7,137,718 | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 64 சம்பவங்கள் தொடர்பாக இன்னும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் அறவீடு செய்ய வேண்டி இருந்தது. | இந்த நட்டங்கள் மற்றும் சேதங்களில் அதிகமானவை பல ஆண்டுகள் பழைமையானவை என்பதனால் பரீட்சிப்புக்களை நடாத்துவது சம்பந்தமாக காணப்பட்ட நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை அதற்கிணங்க எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் சேதங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | நி.பி 396 | 18,641,987 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 உச்ச நீதிமன்ற வலயங்களின் 58 வங்கி கணக்குகளினால் வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களை மிகைத்த காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நீதிமன்ற வலங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | திணைக்களத்தின் 71 வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படவில்லை | நீதிமன்ற நீதிபதிகளின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பது நடைமுறையில் மிகவும் சிக்கலான செயற்பாடானதுடன் எதிர்காலத்தில் அதற்காக பொருத்தமான வேலைத்திட்டம் | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |

## 2.4 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| குறித்த செயலுக்கான உபகட்டுநிதி வழங்கியதன் பின்னர் குறித்த செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் உபகட்டுநிதி மீண்டும் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 206,800 தொகையான முற்பணங்கள் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் தீர்த்துவைக்கப்படவில்லை. | இந்த முற்பணங்கள் காதி நீதிமனறங்களின் நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு வெளியே செல்வதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் ஆனதுடன் செயற்பாடு முடிவடைந்த உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | உபகட்டுநிதிகளை நிர்ணயிக்கப்பட்டவாறு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 11 உச்ச நீதிமன்ற வலயங்களின் பொது வைப்புக் கணக்கின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துடன் வைப்புக் கணக்கில் காணப்பட்ட மொத்த பிணை வைப்புக்கள் ரூபா 116,077,742 தொகையும் கேள்வி வைப்புக்கள் ரூபா 649,173 தொகையும் தற்காலிக நிறுத்திவைத்தல் வைப்பு ரூபா 36,282,982 தொகையும் ஒப்பந்த நிறுத்திவைத்தல் ரூபா 1,168,628 தொகையுமாகும். | விடுவிப்பதற்கு இயலுமை காணப்படுகின்ற அனைத்து நிறுத்திவைத்தல் பணத்தையும் விடுவிப்பதற்கும் அவ்வாறு இல்லையாயின் நி.பி 571 இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | விடுவிக்ககூடிய வைப்புக்களை நிர்ணயிக்கப்பட்டவாறு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மாகோ மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகம் மற்றும் வழக்கு பொருட்கள் அறையை நிர்மாணிப்பதற்கு 2021 ஒக்தோபர் மாதத்தில் ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து ரூபா 6,820,384 முற்பணம் செலுத்தப்பட்டது. செயற்திட்டத்தை 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2022 நவம்பர் மாதமளவில் முழுச் செலவுகளுமாக ரூபா 24,137,687 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 60 சதவீதமாகும். 2022 திசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்தின் போது நிர்மாணத் துறையில் காணப்பட்ட சிக்கல் நிலைமைக்கு இணங்க இச்செயற்திட்டத்தினை நிறுத்துவதற்குத் தீர்மானித்து உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 60 சதவீதமாகும். இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட செலவு ஒரு விளைவற்ற செலவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு நிகரான பெறுமதியைக் கொண்டதாக செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீண்டும் பொருத்தமான கேள்வி முறைமையினூடாக பெறுகை மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான ஒரு ஒப்பந்தக்காரரினூடாக மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | நிர்மாணங்களை திட்டமிட்டவாறு முடிவுறுத்தி அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கலபிட்டி நீதிமன்ற அலுவலக கட்டிடம் மற்றும் ஆவணக் காப்பத்தினை நிர்மாணிப்பதற்காக 2021 திசெம்பர் மாதத்தின் போது ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து ரூபா 9,922,870 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினை 2023 ஆகஸ்ட் மாத்தில் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நிர்மாணத் திட்டம் மாற்றமடைந்ததன் காரணமாக ஒப்பந்த காலம் 2023 செப்தெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்தின் பிரகாரம் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாததனால் செயற்திட்டத்தினை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது உடன்படிக்கையினை இரத்துச் செய்து மிகுதி முற்பணமாக ரூபா 9,014,383 தொகையினை ஒப்பந்தக்காரர் செலுத்தியிருந்தார். இச்செயற்திட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் நிதி 1 ½ ஆண்டுகள் காலம் பயன்படுத்தப்படாததனைப் போல தொடக்க செலவான ரூபா 908,487 தொகையும் விளைவற்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ரூபா 908,487 முற்பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய விலைப்பட்டியலின் மூலம் அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூா 9,014,382 தொகையும் அறவிட வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | ஒப்பந்த செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் நிதியை விளைதிறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | குளியாபிட்டி மாவட்ட நீதிமன்றத்தின் அலுவலகம் மற்றும் ஆவணக் காப்பகத்தில் நீதிமன்ற மண்டபத்திற்காக உத்தேச கட்டிடத்தினை நிர்மாணித்தல் 2021 நவம்பர் மாதத்தில் முற்பணம் செலுத்தி ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை யெய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினை 2022 ஆம் ஆண்டின் போது முழுமையாக | 02/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2022-09-15 ஆந் திகதி நடைபெற்ற வேலையை முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட (Termination) செயற்திட்டம் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தின் நிர்மாண | வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததனால் திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தினை நிறுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 11,163,922 முற்பணம் இந்த நிறுவனத்தினால் 15 மாதகாலம் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்ததன் பின்னர் 2023 மார்ச் மாதத்தின் போது அமைச்சிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததனால் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் இருதரப்பினரும் இணங்கிக் கொண்டதன் அடிப்படையில் இச்செயற்திட்டத்தினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக 07 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோருவதற்கு 2022 திசெம்பர் 15 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுக்கு 2023 ஏப்ரல் 24 ஆந் திகதியே பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதற்கிணங்க பொருத்தமான வழங்குனரினைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைக்காக 04 மாத காலம் செலவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைக்குள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | பெறுகை நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது எழுதுகருவிகளை கொள்வனவு செய்யும் போது பெறுகைக் | நீதிமன்ற நடவடிக்கைகளை தடையின்றி செயற்படுத்துவதற்காக | பெறுகைகளை அங்கீகரித்த எல்லைக்குள் |

| | | |
|---|---|---|
| குழுவினால் அங்கீகாரம் வழங்கிய விடயங்களின் அளவினை மிகைத்து கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் கொழும்பு நீதிமன்ற வலயத்திற்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,395,888 தொகையான எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | இந்த எழுதுகருவிகளை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பெறுகை அங்கீகாரத்திற்குப் புறம்பாக எச்சந்தர்ப்பத்திலும் கொள்வனவு செய்ய வேண்டாம் என உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 உயர் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படாத அலுவலக உபகரணங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் பயன்படுத்தப்படாத காலம் 01 ஆண்டிலிருந்து 08 ஆண்டுகள் வரை பரந்து காணப்பட்டதுடன் இது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 767 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 756 இன் பிரகாரம் வருடாந்த பொருள் மீளாய்வுச் சபையின் மூலம் பயன்படுத்தப்படாத பொருட்களாக சிபாரிசுகள் வழங்கப்பட்டிருக்குமாயின் அதற்கு இணங்கவும் பயன்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாகவும் நி.பி 767(1) இன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நிதிக் சேவையில் ஈடுபட்டுள்ள பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு | அனைத்து நீதிமன்றங்களிலும் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பிணைவைக்க வேண்டிய போதிலும் 11 உயர்நீதிமன்ற வலயங்களின் 65 உத்தியோகத்தர்கள் ரூபா 1,450,000 பணத்தை பிணையாக வைத்திருக்கவில்லை. | அமைச்சிடம் இல்லாததனால் தற்பொழுது உரிய தகவல்களைக் கோருவதற்காக அனைத்து நீதிமன்றங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புத்தளம் மாகாண உயர் நீதிமன்றத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 14 உத்தியோகத்தர்களின் வைக்கப்பட வேண்டிய பிணைப் பணத்திற்காக பிணை முறியினைப் பதிவுசெய்வதற்கான தகவல்கள் நிதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் போது அவை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் 2023-10-05 ஆந் திகதிய கடித்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சிபாரிசுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | பிணை முறிகளைப் பதிவுசெய்தலினை துரிதமாக செய்தல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் மரணமடைந்ததால் அவரிடமிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த அனைத்து கடனும் அவரின் உரிமையாளருக்குச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு தொகையிலிருந்தும் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி | மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,427,799.33 சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக கடன் மீதி கோவைகளில் குறைபாடுகள் காணப்படுவதனால் இக்கடனை அறவீடு செய்வதற்கு ஓய்வூதிய திணைக்களத்தினால் ஏற்பாடுகள் தீர்த்து வைக்கப்படாததுடன் மரணப் பணிக்கொடையைப் பெற்றுக்கொள்ளவதற்கு நலனாளிகள் முன்வராத சந்தர்ப்பத்தில் முற்பணங்கள் பீ கணக்கின் கடன் மீதியை மாத்திரம் | கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வறத்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3,427,799 ஆனதுடன் அம்மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 133,360 தொகையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 214,110 ஆகவும் காணப்பட்டது. | தீர்த்துவைப்பதற்குத் தேவையான ஆவணங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு துரித முயற்சியாக உரிய நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்படுகின்ற வேளையில் அவரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொடர்பான விபரம் திணைக்கள தலைவரினால் ஓய்வூதிய பணிப்பாளருக்கு அனுப்பிவைத்து உத்தியோகத்தரின் திரண்ட ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடை பணத்திலிருந்து கழிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுததி வரை ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்த கடன் மீதி ரூபா 12,135,186 ஆனதுடன் அந்த மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய மீதி கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 243,269 ஆகும். | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 12,735,186 கடன் மீதியில் மீதியில் ரூபா 563,160 பணம் இன்றுவரை தீர்த்து வைக்க கூடியதாக இருந்ததுடன் மிகுதிக் கடன் மீதிகளையும் தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஓய்வூதியத்திற்கு தகமையற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து வருடாந்தமாக கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை நிதி ஏற்பாடு விடுக்கப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனக் கடன்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அவ்வாறு பெற்றுக்கொள்ளும் போது | இது 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் ஆனதுடன் உச்ச நீதி மன்றத்திடம் விசாரித்த போது கொ/உச்சநீ/க/முற்பீ/2021 ஆம் இலக்க2021-04-09 மற்றும் 2021-10-13 ஆந் | கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்கனவே பெற்றுக்கொண்ட வாகனக் கடன்கள் முழுமையாக செலுத்தி முடிவுறுத்தி இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிககை எடுக்காது கொழும்பு உச்ச நீதிமன்ற வலயத்தில் சேவையாற்றி வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஒரு பதிவாளருக்கு ஒரு மோட்டார் வாகனக் கடன் மற்றும் பைசிகிள் கடன் ஆகிய இரண்டு வகையான கடன்களும் வழங்கப்பட்டிருந்ததனால் அவரிடமிருந்து ரூபா 107,000 மோட்டார் வாகன கடனும் ரூபா 3,800 பைசிகிள் கடனும் அறவிட வேண்டியிருந்ததுடன் அந்த மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | திகதிய கடிதங்களின் மூலம் இந்த உத்தியோகத்தரின் கடனை அறவீடு செய்வதற்கு அல்லது மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக வேறு எந்த தகவலையும் தேடிக்கண்டு பிடிக்க முடியாதிருந்தது எனவும் இவ்வாறான காலங்கடந்த கடன் மீதி சம்பந்தமாக உடனடியாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக MOJ/AC/13/39/2024 ஆம் இலக்க 2024-04-19 ஆந் திகதிய கடித்தின் மூலம் தேவையான அறிவிறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஈ) | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய முழுக் கடன் மீதி ரூபா 370,235 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 6,975 தொகையும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 17,500 தொகையுமாகும். | ரூபா 6,975 கடன் மீதி 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழையவை என்பதனால் நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் பழிவழிப்பதற்கும் மிகுதி கடன் மீதிகளை 2024 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 10,475,575 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் | வேலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்ரதகளின் ஒழுக்காற்று நடவடிக்ககைள் முடிவடைந்ததிருக்காததனால் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது எனவும் பல சந்தர்ப்பங்களில் உரிய உத்தியோகத்தர்களுக்கு | கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,375,612 தொகையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,501,002 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,363,611 தொகையுமாகும். | தெரியப்படுத்தி மாதாந்த தவணைப் பணமாகவேனும் கடனை தீர்த்துவைப்பதற்கும் பிணையாளர்களின் தகவல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து கடனை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய முழுக் கடன் மீதி ரூபா 9,403,611 ஆனதுடன் அந்த மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் 344,468 தொகையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,471,919 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 884,044 தொகையுமாக காணப்பட்டது. | சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடனை உடனடியாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிதிமன்றத்தினால் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் பிணையாளர்கள் இருப்பார்களாயின் பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க சில உத்தியோகத்தர்கள் தவணைப் பண ரீதியாக கடன் பணத்தை தீர்த்துவைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு வேண்டிக் கொண்டுள்ளதுடன் அதற்காக தற்பொழுது உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நிதிப்பிரமாணம் 586(2) இன் பிரகாரம் உச்ச நீதிமன்றத்தினால் பேணப்படுகின்ற ஆவணங்களின் பிரகாரம் 03 உச்ச நீதிமன்றங்களின் 60 வழக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக ரூபா 7,545,500 தண்டப் பணம் திசெம்பர் 31 ஆந் திகதி | உரிய தண்டப் பணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்தவில்லையாயின் சிறைத் தண்டனை வழங்கப்படும். தண்டப் பண காலம் முடிவடைவதற்கு முன்னர் தண்டப்பணம் செலுத்தப்படுமாயின் தண்டப் பணத்தை அறவீடு செய்யலாம் என்பதுடன் | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | உரிய தண்டப்பணம் செலுத்தப்படவில்லையாயின் அதற்காக சிறைத்தண்டனை நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 16 நிர்மாணச் செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேலை முற்பணங்களில் ரூபா 301,050,923 மீதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்படாதிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 செயற்திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ரூபா 48,599,924 முற்பணத்தில் எந்த மீதியும் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் தொடர்பாக அறவிட வேண்டிய முற்பணம் அந்த செயற்திட்டங்களுக்குரிய விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது செய்யப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதிக்கு இணங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(iii) ஆம் பந்தியின் பிரகாரம் முறைப்படியாக அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்திற்காக அங்கீகரித்த ஆளணியினர் 5,256 ஆகவும் உள்ளபடியான ஆளணியினர் 4458 ஆகவும் இருந்ததனால் 798 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | நிதி அமைச்சின் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதன் கீழ் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ள முடியாதுள்ளதுடன் ஆட்சேர்ப்புக்கள் மீளாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்று பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு | வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிககை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | அலுவலக ஊழியர், அழைப்பாணைகளை பகிர்ந்தளிப்பவர்கள், மற்றும் எஸ்கீசி அமுல்ப்படுத்துபவர்கள், நீதிமன்ற காவலாளர்கள் ஆகிய பதவிகளில் அதிக வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அந்த அளவு முறைப்படியாக 455, 192 மற்றும் 97 ஆக இருந்தன. | அழைப்பாணைகளை பகிர்ந்தளிப்பவர்கள் மற்றும் எஸ்கிசீ அமுல்ப்படுத்துபவர்கள் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக எழுத்துமூல பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆட்சேர்ப்பு நடைமுறை சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்கபளை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |